**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**

**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி.**

**MCOP.No.81/2019**

பெயர் :– பால்ராஜ் (P.W.–1)
த/பெ. :– சின்னகுஞ்சு
தேதி :– 24.06.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

இந்த விபத்து இரு, இருசக்கர வாகனங்களால் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் எனது வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TVS 50 வாகன ஓட்டுநர் என் வாகனத்தின் மீது வேகமாக வந்து கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து மோதிய விபத்து என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளது. நான் ஓட்டிச்சென்ற வாகனம் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது அது 3ம் எதிர்மனுதாரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் தான் விபத்தை ஏற்படுத்தியது. அந்த வாகனத்திற்கு காப்பீடு கிடையாது. அந்தவாகன ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் கந்தசாமிதான் இந்த விபத்துக்கு காரணம் என்பதால் அவர் மீது பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண் 159/2018ன் கீழ் வாகன விபத்து வழக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சரியான திசையில் மிதமான வேகத்தில் வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என் மீது எந்த தவறும் இல்லை. எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் விபத்தினை ஏற்படுத்திய கந்தசாமிதான் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். என் மீது எந்த தவறும் இல்லை என்ற காரணத்தினால் நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளர் 2வது எதிர்மனுதாரர் மற்றும் காப்பீடு நிறுவனமான 3ம் எதிர்மனுதாரரும் எந்த நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.